## சுருக்கம்

உதவி பெறும் கல்லூரிகள்– அரசு உதவி பெறும் கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியரல்லாப் பணியாளர்களின் பணியிடங்களை நிரப்பிக் கொள்வதற்கு அனுமதி அளித்தல்– ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (டி1) துறை

அரசாணை(நிலை) எண். 114 நாள்: 28 .6.2012

திருவள்ளுவர் ஆண்டு 2043
ஆனி 14

படிக்கப்பட்டவை:

1 அரசாணை நிலை எண். 135, உயர் கல்வி (டி1) துறை நாள். 12.6.2009.
2 கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை, கடித எண். 17509 /ஜி3 / 2005, நாள். 28.10.10, 26.3.2012 மற்றும் 16.4.2012.

‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚‚

ஆணை:

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் 1.6.2008க்குப் பின்னர் காலியாக உள்ள ஆசிரியரல்லாப் பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி ஆணை வழங்குமாறு கல்லூரிச் செயலர்களிடமிருந்து அவ்வலுவலகத்தில் கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன என்றும், ஒவ்வொரு வருடமும் மே 31 முடிய பணிபுரிய ஆசிரியர்களுக்கு மறு நியமன ஆணை வழங்கப்படுவதால், அப்பணியிடங்கள் ஜீன் 1 முதலே காலியாகும் நிலை ஏற்படும் என்றும், ஆனால் ஆசிரியரல்லாப் பணியிடங்களைப் பொறுத்தமட்டில் அவ்வாறில்லாமல், அவ்வப்போது நேரும் இறப்பு, பணித் துறப்பு, பணிநிறைவு மற்றும் தன் விருப்ப ஓய்வு ஆகியவைகளால், அப்பணியிடங்கள் வருடத்தின் இடையிடையே காலியாகும் நிலை உள்ளது என்றும், அவ்வாறு காலியாகும் ஆசிரியரல்லாப் பணியிடங்களில் பெரும்பாலானவை, ஊட்டுவகைப் பணியிடத்தில் இருக்கும் தகுதியான, பணி மூப்புடைய ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதன் மூலம் தான் பொதுவாக நிரப்பப்படுகின்றன என்றும், உதாரணமாக, உதவியாளர் பணிநிலையில் இருந்து கண்காணிப்பாளராகவும், இளநிலை உதவியாளர், தட்டச்சர், பண்டக காப்பாளர் ஆகிய பணியிடங்களிலிருந்து உதவியாளராகவும், ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர் மற்றும் நூலக உதவியாளர் போன்ற பணியிடங்களிலிருந்து இளநிலை உதவியாளர் ஆகவும் அடிப்படைப் பணியாளர்களிலிருந்து பதிவறை எழுத்தர் மற்றும் நூலக உதவியாளர்களாகவும் பதவி உயர்வு மூலம் தான் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன என்றும், அவ்வாறு ஊட்டு வகைப் பணியிடங்களில் தகுதிவாய்ந்த நபர்கள் எவரும் இல்லாதிருப்பின் அக்காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலமாக நிரப்பிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு வந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

…..2

**2.** மேலும் **2001**ம் ஆண்டு முதல் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு அரசின் தடையாணை அமலில் இருந்த காரணத்தினால் உதவி பெறும் கல்லூரிகளிலும் காலியேற்பட்ட ஆசிரியரல்லாக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் நிலுவையில் இருந்து வந்தன என்றும், தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் **31.05.2008** வரை உதவி பெறும் கல்லூரிகளில் நிரப்பப்படாமல் காலியாக இருந்த ஆசிரியரல்லாப் பணியிடங்களில், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், பண்டகக் காப்பாளர், ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர் ஆகிய **793** பணியிடங்களை நிரப்புவதற்கு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அரசால் வழங்கப்பட்டது என்றும், மேற்காண் பணியிடங்களைத் தவிர அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள், குறியீட்டாளர் போன்ற பணியிடங்கள் தடையாணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து உதவி பெறும் கல்லூரிகளில் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன என்றும், **1.6.2008**க்குப் பின்னர் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் ஏற்பட்ட காலி பணியிடங்களை பதவி உயர்வு மூலமாகவோ அல்லது நேரடி நியமனம் மூலமாகவோ நிரப்பிட அனுமதி கோரும் கருத்துருக்களில் பெரும்பான்மையான ஆசிரியரல்லாக் காலிப் பணியிடங்கள் பதவி உயர்வு மூலமே நிரப்பப்படுவதால் அப்பணியிடங்களில் புதிதாக நியமனம் மேற்கொள்ளும் நிலை எழுவதில்லை என்றும், எனவே அரசிற்கு அதிகமாக நிதிச்சுமை ஏற்படும் வாய்ப்பும் இல்லை என்றும், எனவே **1.6.2008** முதல் **31.5.2011** வரையிலான காலங்களில் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியரல்லாப் பணியாளர்களின் காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்களை பின்வருமாறு அனுப்பியுள்ளார். இது குறித்து உரிய ஆணை வெளியிடுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| S. No. | Name of the Post | Total Sanctioned post | 2009 | 2010 | 2011 | Total Vacancy |
|---|---|---|---|---|---|---|
| | | | 1.6.2008 to 31.5.2009 | 1.6.2009 to 31.5.2010 | 1.6.2010 to 31.5.2011 | |
| 1 | Superinten dent | 120 | 5 | 7 | 13 | 25 |
| 2 | Assistant | 343 | 18 | 11 | 20 | 49 |
| 3 | Junior Assistant | 476 | 25 | 24 | 31 | 80 |
| 4 | Typist | 293 | 15 | 14 | 12 | 41 |
| 5 | Store Keeper | 113 | 4 | 4 | 7 | 15 |
| 6 | Lab Asst. | 1246 | 62 | 36 | 59 | 157 |
| 7 | Record Clerk | 463 | 29 | 26 | 24 | 79 |
| 8 | Library Assistant | 149 | 14 | 5 | 16 | 35 |
| 9 | Office Assistant | 732 | 415 | 26 | 10 | 451 |
| 10 | Watchman | 289 | 126 | 18 | 9 | 153 |

….3

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | Waterman | 183 | 78 | 6 | 3 | 87 |
| 12 | Sweeper | 647 | 227 | 25 | 18 | 270 |
| 13 | Scavenger | 204 | 64 | 7 | 4 | 75 |
| 14 | Gardener | 203 | 80 | 8 | 7 | 95 |
| 15 | Marker | 149 | 46 | 6 | 1 | 53 |
| 16 | Gasman | 6 | 1 | 1 | 0 | 2 |
| 17 | Library Attendant | 2 | 0 | 0 | 0 | 0 |
| 18 | Driver | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19 | Jr. Mech. | 69 | 14 | 3 | 1 | 18 |
| 20 | Herberium Keeper | 44 | 11 | 3 | 1 | 15 |
| 21 | Museum Keeper | 66 | 16 | 2 | 2 | 20 |
| 22 | Grounds Man | 4 | 2 | 1 | 0 | 3 |
| 23 | Agri Field Assistant | 2 | 1 | 0 | 0 | 1 |
| 24 | Office Assistant | 3 | 0 | 0 | 0 | 0 |
| 25 | Life-guard-cum-pond cleaner | 2 | 0 | 0 | 0 | 0 |
| 26 | Electrical Supervisor | 1 | 0 | 0 | 0 | 0 |
| 27 | Electrician | 2 | 0 | 0 | 0 | 0 |
| 28 | B.Sc. Phy.Edn. Marker | 4 | 0 | 0 | 4 | 4 |
| 29 | Lab Attender | 7 | 0 | 0 | 0 | 0 |
| Grand Total | | 5822 | 1253 | 233 | 242 | 1728 |

3. 22.8.2008ல் உள்ள படி காலியாக உள்ள 573 அலுவலக உதவியாளர் பணியிடங்கள், 64 குறியீட்டாளர்கள் மற்றும் 645 பெருக்குபவர், காவலர்கள், தோட்டக்காரர்கள், துப்புரவு பணியாளர்கள் ஆகிய பணியிடங்களை நிரப்புவது தொடர்பான கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. இக்கருத்துரு தொடர்பாக தனியே ஆணைகள் வெளியிடப்படும்.

…4

4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் மேற்காண் கருத்துருவினை அரசு கவனமாக ஆராய்ந்தது. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கம்மியர், சுருக்கெழுத்து தட்டச்சர், அருங்காட்சிக் காப்பாளர், தாவர உலர் காப்பாளர், ஆய்வக டெக்னீசியன், உடற்பயிற்சி பயிற்றுநர், படச்சுருள் இயக்குநர் ஆகிய பணியிடங்களை நீக்குவதற்கு ஆணையிடப் பட்டுள்ளதன் அடிப்படையில், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் காலியாகவுள்ள **25** கண்காணிப்பாளர் பணியிடங்கள், **49** உதவியாளர் பணியிடங்கள், **80** இளநிலை உதவியாளர் பணியிடங்கள், **41** தட்டச்சர் பணியிடங்கள், **15** பண்டக காப்பாளர் பணியிடங்கள், **157** ஆய்வக உதவியாளர் பணியிடங்கள், **79** பதிவுறை எழுத்தர் பணியிடங்கள், மற்றும் **35** நூலக உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் **481** பணியிடங்களை மட்டும் சம்மந்தப்பட்ட கல்லூரிகள் நிரப்பிட ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.**34665**/Edn-I/12, நாள் **26.6.2012 –**ல் அளித்துள்ள ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–**6**
மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள், (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –**35**
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
கருவூலக் கணக்கு அலுவலர், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்பத்தூர், திருநெல்வேலி, வேலூர்.
மாநிலக் கணக்காயர், சென்னை –**18/35.**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –**9.**
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –**9.**
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –**9.**
**நகல்:**
நிதி (கல்வி I) துறை சென்னை –**9**
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,உயர்கல்வித் துறை, சென்னை–**9.**
இ.கோ / உதிரி

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்